செ.வெ.எண். 01/நவம்பர் தேதி : 01.11.2016

# தருமபுரி மாவட்டம்

## சைனிக் பள்ளி, அமராவதி நகரில் 2017-2018 ம் ஆண்டிற்கு ஆறாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்பில் சேர நுழைவுத் தேர்வு - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்!

சைனிக் பள்ளி அமராவதி நகரில் ஆறாம் வகுப்பு மற்றும் ஒன்பதாம் வகுப்பில் சேர நுழைவுத் தேர்வு நடத்தப்படவுள்ளது. இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்திட கீழ்காணும் விதிமுறைகள் தெரிவிக்கப்படுகிறது.

1. ஆறாம் வகுப்பில் சேர வயது 10 முதல் 11 வரை (02.07.2006 முதல் 01.07.2007க்குள் பிறந்திருக்க வேண்டும்)
2. ஒன்தாம் வகுப்பில் சேர வயது 13 முதல் 14 வரை (02.07.2003 முதல் 01.07.2004க்குள் பிறந்திருக்க வேண்டும்)
3. பெற்றோருடைய ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும்.
4. ஆண் சிறார்கள் மட்டும் சேர்க்கைக்கு தகுதியானவர்.
5. காலியிட எண்ணிக்கை ஆறாம் வகுப்பிற்கு 80ம் ஒன்பதாம் வகுப்பிற்கு 10ம் தோராயமாக உள்ளது.
6. முன்னாள் படைவீரர் / படைவீரர்களின் சிறார்களுக்கென 25% ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
7. தேர்வு மையம் - ஆறாம் வகுப்பிற்கு – அமராவதி நகர் மற்றும் புதுச்சேரி
   - ஒன்பதாம் வகுப்பிற்கு – உடுமலைப்பேட்டை, புதுச்சேரி மற்றும் சென்னை
8. விண்ணப்பக் கட்டணம் பொதுப்பிரிவினர் / பாதுகாப்பு பிரிவினருக்கு ரூ.650/-ம் SC/ST பிரிவினருக்கு ரூ.500/-க்கான வங்கி வரைவோலையினை “Principal, Sainik School, Amaravathi Nagar” என்ற பெயரில் எடுக்கவேண்டும்.
9. விண்ணப்பம் பெற கடைசி நாள் : 18.11.2016
10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கும் கடைசி தேதி : 30.11.2016
11. நுழைவுத் தேர்வு நடக்கும் நாள் : 15.01.2017

மேலும் விவரத்திற்கு www.sainikschoolamaravathinagar.edu.in என்ற இணையதள முகவரியிலும் மற்றும் தொலைபேசி எண்கள்.04252-256246, 04252-256296 மூலமும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.